**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 208/2007**

**Date :18.02.2026**

**பி. வா.சா.1 -சுப்பிரமணியன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இவ்வழக்கில் நான் எந்த வருடம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டேன் என்றால் சுமார்2½ வருடம்இருக்கும். நான் கூறப்படும் நிர்வாகம் எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் 2023. மேற்படி நிர்வாகம் ஏற்படுத்துவதற்கு முன்பாக என்னை இவ்வழக்கில் கட்சி சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்ட பின்பு வாதியின் வழக்குரைக்கு தனியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் இனிதான் தாக்கல் செய்ய வேண்டும். வாதியின் வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வாதி இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் வயலை தரமாட்டேன் அதற்கான பாட்டமும் தரமாட்டேன் என்று கேட்டுள்ளார்.

வழக்கு பட்டிகை சொத்து வாதியின் கைவசம் எத்தனை ஆண்டுகள் உள்ளது என்றால் சுமார் 35 வருடங்கள் இருக்கும். வாதி வயல் மற்றும் பாட்டம் தரமாட்டேன் என்று கூறியதாக கூறியுள்ளேன். அதற்கான நடவடிக்கைகள் நிர்வாகத்தில் இருந்து எடுக்கப்பட்டதா என்றால் முதலில் கேட்டோம் பின்பு அவரை வழக்கு தாக்கல் செய்தார். குலசேகர நங்கை அம்மன் Trust தற்போது வரையிலும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல பதிவு செய்யப்பட்டுள்ளது. எந்த வருடம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 2023 பதிவு எண் என்ன என்றால் நியாபகம் இல்லை. மேற்படி Trust பதிவு செய்யப்பட்டுள்ளது காண்பிப்பதற்கு நான் எவ்வித ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். மேற்படி பதிவு செய்யப்பட்ட விவரத்தை

நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

குலசேகர நங்கையம்மன் Trust தற்போது வரையிலும் பதிவு செய்யப்படாத காரணத்தினால்தான் நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடப்படவில்லை. மேலும் அதற்கான ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு 2007 ல் தாக்கல் செய்தபோது எத்தனை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஐந்து. மேற்படி ஐந்து பிரதிவாதிகளும் குலசேகர நங்கையம்மன் Trust ல் உறுப்பினர்களாக இருந்தார்களா என்றால் ஆம். மேற்படி 5 பிரதிவாதிகளின் பதவிக்காலம் எப்போது முடிவடைந்தது என்றால் அவர்களுக்கு சரியான அனுகுமுறை இல்லாததால் 2009 ம் வருடம் நிர்வாகம் மாற்றப்பட்டது.

நிர்வாகம் மாற்றப்பட்ட பின்பு யார் நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டார்கள் என்றால் உமைதானு பிள்ளை , சுடலையாண்டி பிள்ளை, ராஜங்க பிள்ளை , சிவராமன் மற்றும் சிதம்பரத்தானு. மேற்படி நபர்களை எந்த வருடம் பொறுப்பில் அமர்த்தினார்கள் என்றால் 2009 சரியாக நியாபகம் இல்லை. மேற்படி நபர்கள் எத்தனை வருடம் பொறுப்பில் இருந்தார்கள் என்றால் சுமார் ஐந்து வருடம். கோலப்பபிள்ளை , சிதம்பரம் பிள்ளை, வீரப்பத்திர பிள்ளை, போ. சுடலையாண்டி , வீ. சிவராமன் ஆகியோர்கள் எந்த வருடம் பொறுப்பில் அமர்த்தினார்கள் என்றால் 2014-2015 ல் அமர்த்தப்பட்டிருப்பார்கள். எனக்கு குலசேகரபுரம் சொந்த ஊர் என்றால் சரிதான். வாதிக்கும் குலசேகரபுரம் சொந்த ஊர் என்றால் சரிதான். மேற்படி கோலப்பபிள்ளை , சிதம்பரம் பிள்ளை , வீரப்பத்திர பிள்ளை, போ. சுடலையாண்டி , வீ. சிவராமன் ஆகியோர்கள்பொறுப்பில் அமர்த்தப்பட்ட பின்பு இவ்வழக்கில் தங்களை கட்சி சேர்க்க வேண்டி மனுதாக்கல் செய்தார்கள் அதனை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி மனுவில் அருள்மிகு குலசேகரநங்கை குலசேகர புரம்

ஊர் வெள்ளாளர் கமினியூட்டி Trust Represented by Principle Trustee கோலப்பபிள்ளை , சிதம்பரம் பிள்ளை, வீரப்பத்திர பிள்ளை, போ. சுடலையாண்டி , வீ. சிவராமன் என்று ஆகியோரை கூடுதல் பிரதிவாதிகளாக சேர்க்கவேண்டி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் அது தவறு.மேற்படி மனு எண் 504 எந்த வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டது எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் நாங்கள் பொறுப்பிற்கு வந்த பின்பு. நாங்கள் பொறுப்பிற்கு வந்த பின்பு மேற்படி மனுவை படித்துபார்த்துள்ளோமா என்றால் படித்து பார்க்கவில்லை. இரண்டு கோவில்களும் ஒரே Trust ல் தான் வரும்.

மேற்படி இரண்டு கோவில்களும் ஒரே Trust ல் தான் வரும் என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 21 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 21 ஆவணங்களில் மேற்படி இரண்டு கோவில்களும் ஒரே Trust ல் தான் வரும் என்பதற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி மனு எண் 504/2010 இரு தரப்பிலும் ஆவணங்கள் பரீசிலனை செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி மனுவில் தாக்கல் செய்த பதிவு செய்யப்பட்ட ஆவணமான எ.ம.சாஆ 1 /வாசாஆ 5 யை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்க்கவில்லை. அவ்வாறு ஒரு Trust கிடையாது. நான் எனது முதல் விசாரணையில் குலசேகரபுரம் உர் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் வழிபாட்டுக்குழு அறக்கட்டளை என ஒரு ஆவணத்தினை போழியாக தயார் செய்து குலசேகரபுரம் ஊர் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலினை அவருடைய

குடும்பத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 02.07.2008 ல் பதிவு செய்யப்பட்ட ஆவணமான எ.ம.சாஆ 1 /வாசாஆ 5 ரத்து செய்யக் கோரி ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. ஊரைக் கூட்டி சொன்னோம் அவர் கேட்கவில்லை.

2007 ல் கட்சியாக இருந்த ஐந்து பிரதிவாதிகளின் எதிர் வழக்குரையில் வழக்குப் பட்டிகைச் சொத்து குலசேகரபுரம் ஊர் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் Trust க்கு உரிமைப்பட்டது அல்ல. மேலும் குலசேகர நங்கை குலசேகரபுரம் ஊர் வெள்ளாளர் சமுதாய நிர்வாக வகைக்கு Trust க்கு உரிமைப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2007 ல் கட்சியாக இருந்த ஐந்து பிரதிவாதிகளின் எதிர் வழக்குரையில் பத்தி 9 ல் வாதியை வழக்கு பட்டிகை சொத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்ற அவசியமில்லை. என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2007 ல் கட்சியாக இருந்த ஐந்து பிரதிவாதிகளின் எதிர் வழக்குரையில் பத்தி 11 ல் தற்போது உள்ள நிர்வாகிகள் வாதியை வழக்கு பட்டிகை சொத்திலிருந்து சட்டப்படி வெளியேற்ற அனைத்து உரிமைகளும் உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வாதியை வழக்கு பட்டிகை சொத்திலிருந்து சட்டப்படி வெளியேற்ற நிர்வாகத்திலிருந்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. நடவடிக்கை எடுத்தோம். சட்ட ரீதியாக நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை எடுத்தோமா என்றால் எடுத்தோம். வழக்குப் பட்டிகைச் சொத்து குலசேகரபுரம் ஊர் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் Trust க்கு உரிமைப்பட்டது அல்ல என்பதால் தான் இன்று வரையிலும் சட்ட ரீதியாக நீதிமன்றம் மூலமாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல.

வழக்குப் பட்டிகைச் சொத்து குலசேகரபுரம் ஊர் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் வழிபாட்டுக் குழு பரம்பரை Trust க்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குப் பட்டிகைச் சொத்து குலசேகரபுரம் ஊர் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் வழிபாட்டுக் குழு பரம்பரை Trust க்கு பாத்தியப்பட்டது என்ற ஒரே காரணத்தினால் தான் வாதி மீதோ மேற்படி எ.ம. ஆ.1 அல்லது வாசாஆ 5 ன் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>